மன்றப்பொருள் 1 | 981| 28/5/2021

கொரோனா 2வது அலையின் நோய் தொற்று அதிகமாக பரவி வருவதால் அனைத்து வணிக வளாகங்கள், ஆகிய இடங்களில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கொரோனா வைரஸ் காய்ச்சல் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள இருக்கும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் கிருமி நாசினிகள் பொருட்களை வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3000000/–(ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மேற்படி கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்கான பாதுகாப்பு உபகரணங்கள், கிருமி நாசினிகள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2916/2020/எச்1

மன்றப்பொருள் 2 982| 28/5/2021

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான கிருமிநாசினிகள் மற்றும் முன்களப்பணியாளர்கள் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்ய 21.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ. எண் | விபரம்( ஒன்றிற்கு ) | ஏ.ஆர்.சி.ட்டி..ஐ.சி, இராஜபாளையம் | டபுள்யூ .எம்.எஸ்.எல். இலத்தூர் |
|---|---|---|---|
| 1 | LIQUID CHLORINE | 22 +18% ஜி.எஸ்.டி | 26 +18% ஜி.எஸ்.டி |
| 2 | லைசால் | 145+18 % ஜி.எஸ்.டி | 154+18 % ஜி.எஸ்.டி |
| 3 | பிளிச்சிங் பவுடர் | 45+18 %ஜி.எஸ்.டி | 53+18 %ஜி.எஸ்.டி |
| 4 | நீர்த்திய சுண்ணாம்பு | 12.25+5 % ஜி.எஸ்.டி | 13.50+5 % ஜி.எஸ்.டி |
| 5 | PPE KIT | 495+5 % ஜி.எஸ்.டி | 630+5 % ஜி.எஸ்.டி |
| 6 | SANITIZER | 450+18% ஜி.எஸ்.டி | 465+18% ஜி.எஸ்.டி |

| | | | |
|---|---|---|---|
| 7 | FACE MASK 1. 3PLY MASK<br>2.COTTON WASHABLE MASK<br>3.N95 | 7 +5% ஜி.எஸ்.டி<br>28+5% ஜி.எஸ்.டி<br>60+5 %ஜி.எஸ்.டி | 7 .80 +5% ஜி.எஸ்.டி<br>42.50+5% ஜி.எஸ்.டி<br>120+5 %ஜி.எஸ்.டி |
| 8 | SODIUM HYPO CHLORIDE | 36+18 %ஜி.எஸ்.டி | 40.50 +18 % ஜி.எஸ்.டி |
| 9 | GLOUSE<br>1)SINGLE USE<br>2)COTTON MIXED<br>3) SYNTHETIC<br>4) COTTON | 10+5% ஜி.எஸ்.டி<br>80+5% ஜி.எஸ்.டி<br>180+5% ஜி.எஸ்.டி<br>25+5 %ஜி.எஸ்.டி | 12.5+5% ஜி.எஸ்.டி<br>105+5% ஜி.எஸ்.டி<br>220+5% ஜி.எஸ்.டி<br>38+5 %ஜி.எஸ்.டி |
| 10 | FACE SHIELD | 76+18 %ஜி.எஸ்.டி | 88+18 %ஜி.எஸ்.டி |
| 11 | PULSE OXIMETER | 1600+18 % ஜி.எஸ்.டி | 1750+18 % ஜி.எஸ்.டி |
| 12 | THERMAL SCANNER | 2500+18 % ஜி.எஸ்.டி | 3100+18 % ஜி.எஸ்.டி |
| 13 | SPRAYER<br>1)MECHANICALSPRAYER WITH SINGLE GUN<br>2) SPARYER MOTOR WITH DOUBLE GUN<br>3)BATTERY SPRAYAR | 14200+12% ஜி.எஸ்.டி<br>23000+12% ஜி.எஸ்.டி<br>4300+12% ஜி.எஸ்.டி | 15500+12% ஜி.எஸ்.டி<br>24700+12% ஜி.எஸ்.டி<br>5450 +12% ஜி.எஸ்.டி |

அ.கு. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் ஏ.ஆர்.சி.ட்டி..ஐ.சி, இராஜபாளையம் என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் 3 983| 28/5/2021

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 3 களக்கோடி தெருவில் (அப்துல்கலாம் இணைப்பு சாலை) உள்ள சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பழுதடைந்த சாலையில் தார்தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் 4 984/ 28/5/2021

தென்காசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த சாலைகளில் தற்போது TNSUDP திட்டத்தின் கீழ் 16.58கி.மீ நீள சாலைகளை ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்ய மானியம், கடன் மற்றும் உள்ளாட்சி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு மேற்கொள்ள நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண்.TNUDF/Projects/Tenkasi Roads, நாள்.07.10.2020-இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

11) **Amount of Loan** : Rs.2.75 Crores (Rupees Two Crores and Seventy Five Lakhs only)

12) **Projects:** Road Improvement sub-project in Tenkasi Municipality.

13) **Project Cost** : Rs.11.15 Crores

14) **Principle Moratorium** : 1 year

15) **Rate of Interest** : 8.60%

16) **Repayment Period** : 6 years

17) **Financing Plan** :

| Sl.No | Means of Finance | Amount (Rs. in Crores) |
|---|---|---|
| 4) | Term Loan from TNUDF under World Bank assisted TNSUDP | 2.75 |
| 5) | Grant from Project Sustainability Grant Fund (PSFG) under World Bank assisted TNSUDP. | 6.32 |
| 6) | ULB Contribution. | 2.08 |
| | **Total Project Cost** | **11.15** |

18) **Completion Period:**
The proposed Project should be completed within one year from the date of commencement of project.

19) **Last date of withdrawal:**
Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement.

20) **Special terms & conditions:**

h) **Procurement Guidelines:**
The ULB shall adhere to the provisions / guidelines of International Bank of Reconstruction and Development for procurement of works, goods and services. The ULB shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from TNUIFSL.

i) **ULB Contribution:**
The ULB shall contribute an amount of Rs.2.08 Crores (Rupees Two Crores and Eight Lakhs only) as own contribution during the construction period.

j) **Operation & Maintenance:**

The ULB shall operate and maintain the Project assets in a good working condition and shall provide budgetary allocation every year for meeting the operation & maintenance charges from its general funds.

k) **Project Account :**

The ULB shall open separate "Project Account" for the sub-project assisted under TNSUDP in the book of accounts of the ULB.

l) **Loan from others:**

The ULB shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF's Loan without obtaining prior written approval from TNUIFSL.

m) **Environment & Social Framework:**

The ULB shall implement the Project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL.

n) The ULB shall honour the debt service payment from there General fund on the respective due dates prescribed by TNUDF. If there ULB fails to honour the debt service on the respective due dates, the same shall be recovered from the state finance commission devolution Grant through the Commissioner of Municipal Administration.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின் படி கடன் பெற்று, மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தென்காசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த சாலைகளில் TNSUDP திட்டத்தின் கீழ் 16.58கி.மீ நீள சாலைகளை ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

[1039/2020/இ1]

மன்றப்பொருள் 5 983/28/1/20...

தென்காசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த சாலைகளில் தற்போது TNSUDP திட்டத்தின் கீழ் 16.58கி.மீ நீள சாலைகளை ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்ய மானியம், கடன் மற்றும் உள்ளாட்சி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு மேற்கொள்ள நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண்.TNUDF/Projects/Tenkasi Roads, நாள்.07.10.2020-இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

8) **Amount of Grant:** Rs.6.32 Crores (Rupees Six Crores and Thirty Two Lakhs only)

9) **Projects:** Road Improvement Project in Tenkasi Municipality.

10) **Project Cost** : Rs.11.15 Crores

11) **Financing Plan** :

| Sl.No | Means of Finance | Amount (Rs. in Crores) |
|---|---|---|
| 4) | Term Loan from TNUDF under World Bank assisted TNSUDP | 2.75 |
| 5) | Grant from Project Sustainability Grant Fund (PSFG) under World Bank assisted TNSUDP. | 6.32 |
| 6) | ULB Contribution. | 2.08 |
| | **Total Project Cost** | **11.15** |

12) **Completion Period:**
The proposed Project should be completed within one year from the date of commencement of project.

13) **Last date of withdrawal:**
Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the grant shall cease on completion of three years from the date of acceptances of grant terms & conditions.

14) **Special terms & conditions:**

d) **Procurement Guidelines:**

The ULB shall adhere to the provisions / guidelines of International Bank of Reconstruction and Development for procurement of works, goods and services. The ULB shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from TNUIFSL.

e) **Statement of Expenditure & Progress report:**

The ULB shall provide monthly Progress reports and statement of Expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.

f) **Environment & Social Framework:**

The ULB shall implement the Project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின் படி கடன் பெற்று, மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தென்காசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த சாலைகளில் TNSUDP திட்டத்தின் கீழ் 16.58கி.மீ நீள சாலைகளை ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

[1039/2020/இ1]

மன்றப்பொருள் 6 986/28/5/2021

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள இலகுரக வாகனம் மற்றும் கனரக வாகனம் இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை பணியில் அமர்த்தவும் அதற்கான செலவினத்திற்கும், மூன்றாண்டுகளுக்கு ஓட்டுநர் பணியனை மேற்கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டிற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஷெடியூல் ஆப் ரேட் அடிப்படையில் ஒப்பந்த ஒட்டுநருக்கு ஊதியம் வழங்கவும் நகர்மன்றத் தீர்மான எண். 344 நாள்.21.05.2018ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. இலகுரக வாகனம் மற்றும் கனரக வாகனம் இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் திரு. எம். சுடலைக்கனி என்பவர் 01.06.2018 முதல் 31.05.2021 முடிய மூன்றாண்டுகள் பணி செய்ய உத்திரவிடப்பட்டது. தற்போது 31.05.2021ல் திரு. எம். சுடலைக்கனி ஒப்பந்தக்காரருக்கு ஓட்டுநர் பணியில் அமர்த்தும் ஒப்பந்தம் முடிவடைகிறது. எனவே ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள 27.02.2021 முதல் 07.05.2021 வரை தேர்தல் நன்னடைத்தை விதி நடைமுறையில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டது.

மேலும் தற்போது கொரோனா இரண்டாவது அலையின் காரணமாக அரசால் ஊரடங்கு காலங்களாக தற்போது வரை உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளது. மேலும் பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதியும் மற்றும் நிர்வாக நலன் கருதியும் திரு. எம்.சுடலைக்கனி ஒப்பந்தக்காரை பழைய ஊதிய விகிதத்திலேயே , 01.06.2021 முதல் மறு உத்திரவு வரும் ஓட்டுநர் ஒப்பந்த பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. திரு. எம்.சுடலைக்கனி ஓட்டுநர் ஒப்பந்தக்காரருக்கு பழைய ஊதிய விகிதத்திலேயே 01.06.2021 முதல் மறு உத்திரவு பிறப்பிக்கும் வரை ஓட்டுநர் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2101/2017/எச்1

மன்றப்பொருள் 7 987/28

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான நடுநிலைப்பள்ளி மற்றும் துவக்கப்பள்ளிகளின் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை சொத்துவரியின் மூலம் வரப்பெறும் கல்வி நிதியில் மேற்கொள்ளவும் அரசாணை (நிலை ) எண். 166 நாள். 23..11.2016ன் மூலம் உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சி தீர்மான எண்.39 நாள். 31.01.2017ன் படி அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியார் மூலம் பள்ளியின் கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனம் கொடுக்கப்பட்ட குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளப்பட்டும், மூன்றாண்டுகளுக்கு மேற்படி நிறுவனமே துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டிற்கும் 10 சதவீதத்திற்கு மேற்படாமல் கூடுதலாக வழங்கவும், கூடுதல் செலவினத்தினையும் கல்விநிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்றத் தீர்மான எண். 286 நாள். 28.03.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இராஜபாளையம், ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், என்ற நிறுவனத்திற்கு பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளவும் 01.06.2018 முதல் 31.05.2021 முடிய மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேலும் 26.02.2021 முதல் 07.05.2021 முடிய உள்ள காலங்களில் சட்டமன்ற தேர்தல் காரணமாக தேர்தல் நன்னடத்தை விதி அமலில் இருந்தது. அதனை தொடர்ந்து கொரோனா இரண்டாவது அலையின் காரணமாக ஊரடங்கு காலம் நீட்டிப்பு செய்யப்பட்டு வரப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒப்பந்தப்புள்ளியோ, விலைப்புள்ளிகளோ பெற இயலாத காரணத்தினாலும், மேற்படி பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி பள்ளி குழந்தைகளின் நலனை கருத்திற்கொண்டும், ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விகித்தில் மேற்படி பணியினை 01.06.2021 முதல் 31.05.2022 முடிய ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தினை கல்விநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. ஏ.வி.எம்.சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் பள்ளியின் கழிப்பறைகளை சுத்தம் செய்யவும் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளவும் மேலும் ஓராண்டு காலத்திற்கு (01.07.2021 முதல் 30.06.2022 முடிய) பணிகள் செய்ய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4683/2016/எச்1

மன்றப்பொருள் 8

தென்காசி நகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள 61 நிரந்தரப் பணியாளர்கள் இருந்த நிலையில் 30.06.2020 அன்று 4 துப்புரவு பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக ஒய்வு பெற இருக்கிறார்கள். மேலும் இவ்வலுவலக கோப்பு ந.க.எண். 4510/2016/எச்1 நாள். 03.02.2017ன் படி 116 துப்புரவு பணியார்களும் மற்றும் வாகனங்களும் தின வாடகைக்கு எடுக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. இந்நிலையில் மேற்படி மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்றதால், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைவான கொடுத்துள்ள ஏ.வி.எம்.சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டு, தற்போது 125 துப்புரவு பணியாளர்களை வெளிப்புற அனுப்புதல் (OUT SOURCE ) முறையில் பணியாளர்களை மட்டும் கொண்டு 01.07.2020 முதல் துப்புரவு பணிகள் மேற்கொள்ள ந.க.எண். 2047/2019/எச்1 ன் உத்திரவு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சியில் உள்ள ஏழு இலகுரக வாகனங்கள் 01.04.2020 முதல் கொரோனா தடுப்பு பணிகளுக்கு கிருமிநாசினிகள் தெளிப்பான்கள் பொருத்தப்பட்டு , கிருமிநாசினிகள் தெளிக்கும் பணிக்கும், இரண்டு லாரிகள் குப்பைகள் எடுக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டும் வருகிறது. இதன் காரணமாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

எனவே ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம், என்ற தனியார் நிறுவனத்திற்கு ஏற்கனவே ந.க.எண்.4510/2016/எச்1 என்ற உத்திரவின் படி வழங்கப்பட்ட ஒப்பந்த விகிதத்தின் அடிப்படையில் 3 வாகனங்களை மூன்று மாதங்களுக்கு மட்டும் (01.07.2020 முதல் 30.09.2020) கூடுதலாக இயக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத் தீர்மான எண்.833 நாள்.30.06.2020 ன் படி அனுமதிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டது. நகர்மன்றத் தீர்மான எண் 867 நாள்.14.09.2020 ன் படி பொதுசுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதி,மேலும் மூன்று (01.10.2020 முதல் 31.12.2020 முடிய) மாதங்களுக்கு நீட்டிக்கவும்,அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுசுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதி 01.01.2021 முதல் 30.06.2021 வரை ஆறு மாதங்களுக்கு நீட்டித்தும் அதற்கான செலவினத்திற்கும் நகர்மன்றத் தீர்மான எண். 915 நாள். 17.12.2020 அனுமதிக்கப்பட்டது. தற்போது கொரோனா இரண்டாவது அலையின் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் ஒப்பந்தப்புள்ளியோ, விலைப்புள்ளியோ கோர இயலாது. பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டும், பொதுசுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதியும் ஏற்கனவே மேற்படி பணியினை பார்த்து வரும் ஏ.வி.எம் சர்வீஸ் பாயிண்ட் இராஜபாளையம் என்ற நிறுவனம் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்திலேயே 01.07.2021 முதல் 30.06.2022ம் முடிய ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. ஏ.வி.எம்.சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் மூன்று வாகனங்களை மேலும் ஓராண்டு காலத்திற்கு (01.07.2021 முதல் 30.06.2022 முடிய) பணிகள் செய்ய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4510/2016/எச்1

<u>மன்றப்பொருள் 9</u>

தென்காசி நகராட்சி பகுதிகளில் உள்ள அடிபம்புகளின் பழுதுகளை சரிசெய்ய ரூ5.00 இலட்சம் மதிப்பீட்டில் 2020-21ம் ஆண்டின் கீழ் இந்நகர்மன்ற தீர்மானம் எண் 757 நாள் 13.02.2020ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்நகர்மன்ற தீர்மானம் எண் 785 நாள் 18.03.2020ன்படி திரு.M.K.அப்துல்ரசாக் ஒப்பந்தகாரருக்கு 19.03.2020ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு, அடிபம்பு பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று வந்தது. மேலும் 26.02.2021ம் தேதி முதல் 08.04.2021 முடிய தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதி அமுல் படுத்தப்பட்டுள்ளது. அதனை தெடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று நோயின் காரணமாக அரசால் முழு ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆதலால் மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளியோ அல்லது ஒப்பந்தப்புள்ளியோ கோர இயலாது. ஆனால் மேற்படி ஒப்பந்தக்காரருக்கு 2020-21ம் நிதியாண்டிற்க்கு (ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரை) ரூ1.32 இலட்சத்திற்கு மட்டுமே பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட் ரூ5.00 இலட்சத்தில் செலவுத் தொகை ரூ1.32 இலட்சம் போக ரூ3.68 இலட்சம் மீதித் தொகை உள்ளது. மேலும் பொதுமக்களின் தண்ணீர் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி ஒப்பந்தக்காரர் 2021-22ம் நிதியாண்டிற்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகித்தில் திரு.M.K.அப்துல்ரசாக் ஒப்பந்தக்காரர் அடிபம்பு பழுது பணிகள் மேற்கொள்ள மனற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்கு திரு.M.K.அப்துல்ரசாக் ஒப்பந்தக்காரர் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகித்தின்படி அடிபம்பு பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

3 பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு கோடைகாலம் என்பதால் ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்கு அடிபம்பு பழுதினை சரிசெய்த வகைக்கு ரூ1.52 வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

4 மேற்படி பணிக்கான மீதித்தொகை ரூ2.16 இலட்சம் முடியும் வரை பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

5 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

990/2/2021

<u>மன்றப்பொருள் 10</u>

தென்காசி நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2020-21ன் கீழ் இந்நகராட்சிப் பகுதியில் கீழ்கண்ட பணிகள் மேற்க்கொள்ள ரூ10352471/-யை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந,க,எண்:20452/2020/L3 நாள்:31.03.2021ல் இரண்டாவது தவணை மான்யமாக விடுவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட அண்ணா நகர் பகுதியில் உள்ள MCCயில் RRC கட்டுதல். | 8.00 |
| 2. | இந்நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் உள்ள Bio-Mining அருகில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல். | 9.60 |
| 3. | இந்நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் உள்ள கசடு கழிவுநீர் மையம் செல்லும் சாலையில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல். | 9.90 |
| 4. | இந்நகராட்சிக்கு சொந்தமான FSTP கட்டிடத்தின் முன்பகுதியில் சுற்றுச்சுவர் அமைத்தல். | 9.80 |
| 5. | இந்நகராட்சிக்கு சொந்தமான FSTP கட்டிடத்தின் பின்பகுதியில் சுற்றுச்சுவர் அமைத்தல். | 9.80 |
| 6. | இந்நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் அலுவலக கட்டிடம் மற்றும் கழிப்பறை கட்டுதல். | 9.90 |
| 7. | இந்நகராட்சிக்கு சொந்தமான FSTP கட்டிடத்திலுள்ள SDB மற்றும் Collection Tank பகுதியில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல். | 9.80 |
| 8. | இந்நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் உள்ள கசடு கழிவு நீர் மையத்தில் Collection Tank 2 கட்டுதல். | 9.80 |
| 9. | இந்நகராட்சிக்கு சொந்தமான மலையான் தெருவில் உள்ள நீர்தேக்கத் தொட்டி பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.00 |
| 10 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆபாத் பள்ளிவாசல் தெரு மற்றும் வாய்க்கால்பாலம் ஆகிய இடங்களில் உள்ள நீர்தேக்கத் தொட்டி பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 8.92 |
| 11 | இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு தேவையான மின்மோட்டார்கள் விநியோகம் செய்தல் | 9.00 |
| | மொத்தம் | **103.52** |

மேற்படி பணிகளை மேற்கொள்ள தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்

991/25/5/2021

**மன்றப்பொருள் 11**

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி ஆய்வின் போது கீழ்கண்ட சுகாதார வளாகங்களில் பழுதுகளை சரிசெய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படி அறிவுறுத்தப்பட்டது. அதன்படி கீழ்கண்ட சுகாதரா வளாகங்கள் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி காலனி, பூங்க விநாயகர் கோவில் தெரு, சிந்தாமணி, தபால் நிலையம் பின்புறம், கோவிக்கால் தெரு, தினசரி சந்தை, ஆயிரப்பேரி ரோடு, ஆசாத் நகர் மற்றும் குலசேகர நாதர் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சுகாதார வளாகங்கள் பழுதினை சரிசெய்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 7.00 |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புலிகுட்டி விநாயகர் கோவில் தெரு. உச்சி மாகாளி அம்மன் கோவில் 2, 3 மற்றும் 4ம் தெரு, ஆய்க்குடி ரோடு சாய் பாபா அருகில் & விலங்கு கருத்தடை செய்யும் கட்டிடம் அருகில், நேரு தெரு மற்றும் அண்ணா தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சுகாதார வளாகங்கள் பழுதினை சரிசெய்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 7.00 |
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட TNHB காலனி, வள்ளி நகர், மங்கம்மாள் சாலை (சாஸ்தா கோவில் அருகில்), களக்கோடி தெரு, கீழ வாலிபன் பொத்தை, மேல வாலிபன் பொத்தை மற்றும் நரிக்குறவர் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள சுகாதார வளாகங்கள் பழுதினை சரிசெய்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 7.00 |

மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் 12** 992/28/5/2021

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள டி.எண். 76ப் 8885 வாகனத்திற்கு டைனமோ மோட்டார் பொருத்தப்பட்டு 11 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. தற்போது டைனமோ பழுதாகி விட்டதால் புதிய டைனமோ வாங்கவும், அதற்கான உத்சே செலவினம் ரூ. 5,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மேற்படி வாகனத்திற்கு புதிய டைனமோ வாங்கவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1279/2021/எச்1

மன்றப்பொருள் 13 993/28/5/2021

சட்டப்பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காகளில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க அரசாணை (4ப) எண் 6 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந2) துறை நாள் 03.09.2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலனியில் உள்ள பூங்காவில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைத்தல் | 9.50 |
| 2 | வார்டு எண் 1 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலனியில் உள்ள பூங்காவில் யோகா மையம் அமைத்தல் | 9.80 |

மேற்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் 14 994/28/5/2021

இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண், 3 ஐ திருமதி. பு.சுப்புலெட்சுமி என்பவரால் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த நிலையில் மேற்படி கடையினை கடந்த மூன்று ஆண்டுகளாக கஷ்டப்பட்டு கடன் வாங்கி வாடகை செலுத்தி, நடந்து வந்ததாகவும், தற்பொழுது மேற்படி கடையினை மேற்கொண்டு நடத்த முடியாத நிலையில் நகராட்சி வசம் ஏப்ரல் 2020 முதங்ல ஜனவரி 2021 வரை வாடகை செலுத்தி ஒப்படைப்பு செய்துள்ளார். பிப்ரவரி 2021 மற்றும் மார்ச் 2021 ஆகிய இரண்டு மாதங்களுக்கும் கொரோனா ஊரடங்கு காலமான ஏப்ரல் 2020 மற்றும் மே.2020 ஆகிய இரண்டு மாத வாடகை அரசாங்கத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் மேற்படியார் ஏப்ரல் 2020 முதல் ஜனவரி 2021 வரை நிலுவையின்றி வாடகை செலுத்தப்பட்டு விட்டதால் பிப்ரவரி 2021 மற்றும் மார்ச் 2021 ஆகிய இரு மாதங்களுக்கு வாடகை தள்ளுபடி செய்து வரப்பெற்றுள்ளது. மேலும் மேற்படியாரால் மேற்கண்ட கடையினை தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் மேற்படி கடையினை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் மறு ஏலமிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2520/2020/அ2

மன்றப்பொருள் 15 995/28/5/21

கொரோனா 2வது அலையின் நோய் தொற்று அதிகமாக பரவி வரும் பகுதிகளை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டு பொதுமக்கள் வெளியில் செல்லாத அளவிற்கு தற்காலிக கம்பு வேலி அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 8,00,000/– ( ரூபாய் எட்டு லட்சம் மட்டும் ) லட்சத்திற்கு மன்ற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மேற்படி கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக தடைசெய்யப்பட்ட பகுதிகளில் தற்காலிக கம்பு வேலி அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2916/2020/எச்1

நகர்மன்றதீர்மாணம்

| மன்றபொருள் எண் | தீர்மாண எண் | தீர்மாணம் |
|---|---|---|
| 1 | 981 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 982 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 983 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 984 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 985 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 986 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 987 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 988 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 989 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 990 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 991 | அனுமதிக்கப்பட்டது |
| 12 | 992 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 993 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 994 | அனுமதிக்கப்பட்டது |
| 15 | 995 | அனுமதிக்கப்பட்டது |